# மனிதா! வேண்டும் நீ உலகுக்கு!

மனிதா! வேண்டும் நீ உலகுக்கு!

ஆம்! ஏன் வேண்டும் நீ உலகுக்கு?

என்றாவது யோசித்தது உண்டா?

உலகம்...

...தான் செழிக்க யார் தருவார் யோசனைகளை, உத்திகளை? நீயேதான்!

...தன் கவலைகளை கொட்டித் தீர்க்க யார் தருவார் காதுகளை? நீயேதான்

...தன் மூடப் பீதியையும் பதற்றத்தையும் தீர்க்க யார் தருவார் பகுத்தறிவை? நீயேதான்!

...தன் நாளை நன்னாளாக்க யார் கற்பிப்பார், முன்னேற்றுவார்? நின் கல்விதான்!

...தன் மீது கொட்டப்படும் குப்பைத் தரவுகளின் உண்மை விளக்கத்தை எவை தரும்?
உன் அறிவுரைகள் தான்!

...தன் அச்சங்களை மிச்சசொச்சம் இல்லாமல் எது அழிக்கும்? நின் வீரம்தான்!.

... தான் இதுவரை கண்டிராத தடைகளை வேதனைகளை நின்று நிலைத்து வென்று காட்ட யார் தருவார் வழிகளை? நீயேதான்!

...தான் கேட்கும் பொய்கள், புனைவுகள், கற்பிதங்களை எவை நீக்கும்?
நீ கூறும் உண்மைகளே!

...தன்னை முடக்கும் நிலையாமை, நிச்சயமற்ற தன்மைகளை எது நீக்கும்?
நின் உற்சாகம்தான்!

...தனக்கு நீ ஒருபங்கை தந்தாலே பத்தாக பெருகும் மகிழ்வை எவை தரும்?
நின் அரவணைப்பையும் உண்மைத் தன்மையும் தாம்!

...தன்னிடம் குன்றி செல்லும் இரக்கத்தை எது பெருக்கும்? மறந்து விடாதே, நின் தாராளம் தான்!

...தன்னில் வாடி வதங்கும் நகரம், சுற்றம், உயிரை எது மீட்கும்? நின் பச்சாதாபம் தான்!

By Ryan M. Niemiec, Education Director, VIA Institute ● Traducción: Breezy Vallejos V. y Jhonatan Barrios Bustos



©Copyright 2020 VIA Institute on Character

...தனக்கு, நீ உனக்கானவன் அல்ல, ஊருக்கானவன் என்பதை எது காட்டும்?
எல்லைக்குள் சிக்காத நின் கூட்டுறவு தான்!

...தனக்கு, பதுக்காமல் கொடை அளிக்க, தூற்றாமல் போற்ற, வீழாமல் வாழ,
எது வழி செய்யும்? நின் நேர்மை தான்!

...தன்னில் கூடும் பற்பல கூட்டங்களுக்கு எது வழி காட்டும்? நின் புதுமைத் தலைமைதான்!

...தன்னை அன்றாட சிக்கல்களால் அலைபாயாமல் நிலை நிறுத்துவது எது?
மன்னிக்கும் நின் மனம்தான்!

...தனக்கு தன் வீடு, தன் பெண்டு, தன் பிள்ளை மனத்தை நீக்குவது எது?
நின் பொது நலம் தான்!

...தான் இல்லம் தாண்டும் போதும், மீண்டும் திரும்பச் செய்வது எது? நின் எச்சரிக்கை தான்!

...தான் கட்டுப்பாட்டுடன் சினம் தொற்றாது செழிக்கச் செய்வது எது? நின் அமைதி தான்!

...தன்னில் அடுத்தவர் தம் செயலின் நன்மையைப் போற்ற, வேண்டுவது எது?
நின் பிறர் நலம் பேணல் தான்!

...தன்னை இருளின் படுகுழியில் விழாமல் காப்பது, மீட்பது எது? நின் நம்பிக்கை ஒளி தான்!

...தன் கருணை முளையை வளர்த்து மரமாக்குவது எது? நின் பாராட்டு தான்!

...தான் மனச் சுமையால் முடங்கும் போது பாரம் குறைப்பது எது? நின் நகைச்சுவை தான்!

...தனக்கு மட்டுமல்ல, அவருக்கும் இவருக்கும் எவருக்கும் இந்நிலை இப்படித் தான் என்பதை
புரிந்து கொள்ள வைப்பது எது? நின் மெய்யறிவுதான்!

.....ஆம்! கண்டிப்பாக வேண்டும் நீ அதற்கு!

**By Ryan M. Niemiec, Education Director, VIA Institute ● Traducción: Breezy Vallejos V. y Jhonatan Barrios Bustos**

©Copyright 2020 VIA Institute on Character